www.tamilarangam.net


# பெண்கள் செய்தி மடல்

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் - 3 : 2 யூன் 2001


**பொருளடக்கம்**


- சூழல் தினம் - 2001
- பெண்கள் நலன்
- பெண்கள் சந்திப்பு
- சங்கங்களின் காலாண்டுக் கூட்டம்
- முறக்கொட்டாஞ் சேனை நூலகம்
- உதவி செய்யாவிட்டாலும்


வன்முறைகளற்ற சமத்துவமான சமுதாயத்தை எதிர் நோக்கியே செயற்பட்டு வரும் நாம் அதற்கான எமது நடவடிக்கைகளையும் அதன் பலாபலன்களையும் இச் செய்தி மடல் மூலம் வெளியிட்டு வருகின்றோம். எமது நோக்கத்தில் நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தை அறிய தங்கள் கருத்துக்களை எதிர் பார்க்கின்றோம்.

ஆசிரியர்

# சூழல் தினம் 05-06-2001

## எமது வளம் எங்கே செல்கிறது

*ஊரான் ஊரான் தோட்டத்திலே*
*ஒருத்தன் போட்டாண்டி*
*வெள்ளரிக்காய்*
*காசுக்கு ரண்டாக விக்கச் சொல்லி*
*கடிதம் போட்டாண்டி*
*வெள்ளக்காரன்*

தொடர்ந்தது சோகம்..... அன்னியர் படையெடுப்பும், தொடர்ச்சியான அன்னியர் ஆட்சியும் எமது மக்களின் வாழ்வின் ஆணிவேர் வரை பற்றிப் பிடித்தது. ஆரோக்கிய வாழ்வின் அடித்தளத்தில் நச்சுக் காளான்கள் வேர்விட்டது. எம்மக்களின் மூளையும், கைகளும் யோசிக்கவும், செயல் படவும் மறுத்தன. எமது பண்பாடு, பழக்க வழக்கம் அத்தனையும் மாறியது. எமது பயிர்ச்செய்கைகளும், பயிர்ச்செய்கை முறைகளும் மாறியது. உணவுகள் மாறியது. எமது மனித மூளைகள் அப்படியே இருக்க அன்னியர் இயந்திரங்கள் இயங்கின........ நாம்........ அஃறினையானோம். பாரம்பரிய முறையிலான எமது நெற்செய்கை மாறியது. கிருமி நாசினி, பசளை, எண்ணையைகள் போன்ற நஞ்சுகளை நிலம் தொடர்ச்சியாக விழுங்கியே சுடுபட்டு தரிசாகியது. நடந்து திரியும், வருடக் கணக்கில் உயிர் வாழும் நாட்டுக் கோழி வளர்ப்பு, இருந்த இடத்தில் தின்று கொழுத்த சதைப் பிண்ட "பாம்" கோழிகளாய் மாறின. மாடு கன்று வளர்த்து கலப்படம் இல்லாமல் பெற்ற ஆரோக்கிய பசும் பால் இரசாயனக் கலவையில் உலர்ந்து, சுடுபட்டு, கலவைகள் சேர்க்கப்பட்ட பக்கட் பால் மாவாக வந்திறங்கியது, எமது உணவுகள் மரபணு மாற்றம் செய்யப்பட்டு அன்னிய உணவு வடிவில் எம் மேசைகளை அலங்கரித்தன. எமது கடல், குளம், வாவி, மீன்கள் தொலை தூரம் கடத்தப்பட்டன. எம் கையில்




தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்கள் வழங்கப்பட்டது, பனைஓலை, தாளோலை, பன்பாய்கள், ஒதுக்கப்பட, பிளாஸ்டிக் பாய்கள் உடல் சூட்டைக் கூட்டியது. இப்படியே.. அனைத்தும்...... தொலைந்தது..... தொலைதூரம் சென்றது, மாறியது, மாறியவடிவங்கள் பெருகியது. ஒன்றாய் பத்தாய் பல்கிப்பெருகி எம்மை மூடியது. இடறினால் வெளி நாட்டுப் பொருட்கள்..... இதம் தரும் குளிர்பான மண்சட்டிபானைகள், பிளாஸ்டிக், அலுமினியம், கண்ணாடி என மாறி நாளுக்குநாள் எம் உடலில் நஞ்சை ஊட்டியது. இன்று எம் மண்ணின் வளத்தை மறந்து போனோம். தொழிலாளர்கள் தொழில் அற்றவர் களானோம். வெளி நாடுகளில் தொழில் தேடி அலைந்தோம்..... ஏமாற்றப்பட்டோம், சுரண்டப்பட்டோம். 20ம் நூற்றாண்டில் ஆரம்ப கோசம் அபிவிருத்தி என்றிருந்தது. ஆனால், 20ம் நூற்றாண்டின் இறுதியில் எமது கோரிக்கை தப்பிப் பிழைத்து வாழ்தல் என்றாகி விட்டது. இந் நிலை மாறவேண்டும் எம் வளங்கள், எம் பூமி மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும். நாமும் நாமாக மீண்டும் உயிர்த்தெழ வேண்டும். தூங்கி விட்ட சிந்தனைகளை தட்டி எழுப்ப வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



எமது கேள்விகள் முழு உலகத்தையும் உலுக்க வேண்டும்.

**அபிவிருத்தி எனும் பெயரில் எமக்கு நடைபெற்றது என்ன?**

**எமக்குரிய தெரிவு யார் கையில்?**

**எமக்குரிய தேவை எது?**

**எமது தேவைகள் யாரால் தீர்மானிக்கப்படுகிறது?**

தொடர்ந்துவரும் சூழல் தினங்களை நினைவுகூறும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நாம் சிந்திக்க வேண்டும். இல்லை எனாது வழங்கும் பூமியின் பொறுமையை நாம் சோதித்தல் கூடாது...... பொறுமை, புரிந்துணர்வு, பராமரிப்பு பெண்ணுக்கும் பூமிக்கும் மட்டும் உரியதல்ல. இவற்றை அனைவரும் கைக்கொண்டு எமது சூழலை பாதுகாக்க வேண்டும். எமது தீண்டல்கள் சுவரில் எறிந்த பந்தாய் எம்மையே தாக்கும். எரிமலைகள் வெடிக்கும் ........ பூகம்பங்கள் கிளம்பும்....... பூமி வாய் பிளக்கும்...... அதன் பொறுமையை நாம் பயன்படுத்தக் கூடாது...... சுரண்டக் கூடாது....... அள்ளி அள்ளி அனியாயம் செய்யக் கூடாது....... இவற்றை நினைவு படுத்துமுகமாகவே நாம் இவ் வருட சூழல்தினத்தைக் கொண்டாடினோம். இதை முன்னிட்டு எமது நிலையமானது பலாக் கன்றுகளையும், மாங் கன்றுகளையும் வழங்கியது.

*மடை மீது கயல் பாயும் மட்டுமா நகர் தன்னில்*
*குறையாத தொழில் உண்டு பெண்னே வாழ்ந்திடுவாய்*
*தென்னம்பழம் சொரிய தேமாங்கனி உதிர பெண்ணே*
*வாழ்ந்திடுவாய்*

*கலாசாரக் குழு*


*வீடு முழுவதும் வெளிநாட்டுப் பொருட்கள்*
*எங்கேயடி மச்சாள்*
*மூதாதையரின் பழங்காலத்துப் பொருட்கள்*
*புண்ணுக்குப் பூசும் வெட்டுராட்டித் தாவரம்*
*ஆச்சியின் பச்சிலைக் கைவைத்தியம்*
*கைவிட்டுப் போச்சுதடி*
*மண்பானைத் தண்ணியும்*
*பத்திய உணவும் - பாழாகிப் போச்சுதடி*
*ஊசி எண்டும் குளிசை எண்டும்*
*உடல் சூடாகிப் போச்சுதடி*
*மாவிடித்தால் உடல் பெறும் உறுதி*
*யந்திர சாமானால்*
*மலையேறிப் போச்சுதடி*

*ஜெயந்தி தளையசிங்கம்*

# சுகாதாரக் கையேடு நூல் அறிமுகம்

## பெண்கள் நலன் – 02

பெண்கள் பலவாறான சமூக கட்டுப்பாட்டிறகுள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். விரும்பியோ விரும்பாமலோ கட்டுப்பாடுகளை பெண்கள் தளர்த்தவோ, மீறவோ முடியாமல் எமது மூதாதையர் பல வித வரைவிலக்கணங்களை வகுத்துள்ளனர். இக்கட்டுப்பாடுகளில் அனேகமானவை பெண்களின் உடல் சார்ந்தே அமைந்துவிடுகிறது. பெண்களின் உடலானது மறைக்கபபட்டு ரகசிய முறையில் பாதுகாக்கப்பட வேண்டிய தொன்று என்றும் பெண் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற் குணங்களுக்குள் வாழ வேண்டியவள் என்றும் பல கருத்துக்கள் மக்கள் மனங்களில் பதிக்கப்பட்டு விட்டது. இதனால் இவர்கள் உடல் உளரீயாக பலவித சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது குறிப்பிட்ட காலங்களில் ஏற்படும் உடல் மாற்றங்களின் போது சந்தேகத்திற்கு உள்



ளாகும் பெண்கள் பல வித மனக் குழப்பங்களிற்கு உள்ளாகின்றார்கள்.

அத்துடன் தமது உடல் மற்றும் பாலியல் உறுப்புகளில் ஏற்படும் நோய்களையும் அவை பற்றிய சந்தேகங்களையும் வெளிச் சொல்லாமல் மறைக்கிறார்கள். இவ்வாறு மறைப்பதனால் அதிகம் பேர் உயிர் இழப்பை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகிறது.

இப்பரிதாப நிலை இன்று வரை கிராம புறங்களில் நிகழ்ந்து கொண்டே உள்ளது. இவற்றை தவிர்க்குமுகமாகவே நாம் இச் சுகாதரக் கையேட்டினை மூன்று பாகங்களாக வெளியீடு செய்துள்ளோம் இம் மூன்று பாகங்களையும் வாசிப்பதன் மூலம் பூரண பலனை அடையலாம் என நம்புகின்றோம். மக்கள் நலன் கருதி 30/= விலையில் விற்பனை செய்கின்றோம். இக் கையேட்டினை எமது நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

www.tamilarangam.net

# பெண்கள் சந்திப்பு - 2001



கடந்த 19-05-2001 அன்று ஜேர்மனியில் உள்ள பேர்ளின் நகரில் "20ஆவது பெண்கள் சந்திப்பு" நிகழ்வு இடம்பெற்றது. இச்சந்திப்பில் ஜேர்மனியின் பலபாகங்களிலிருந்தும், நோர்வே, பிரான்ஸ், சுவிற் சர்லாந்து இங்கிலாந்து இலங்கை போன்ற நாடுகளிலிருந்தும், பெண்கள் கலந்து கொண்டனர். இலங்கையிலிருந்து மா. மங்களேஸ்வரி கலந்து கொண்டார். 20வது பெண்கள் சந்திப்பிற்கு திருமதி உமா தலைமை தாங்கினார். இச்சந்திப்பானது இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து மேற்கு நாடுகளில் வசிக்கும் பெண்களால் 1990ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

"பெண்கள் சந்திப்பின் முதலாவது நிகழ்வாக திருமதி. ஜசிந்தா அவர்களால் "கேட்டிருப்பாய் காற்றே" எனும் சிறுகதை (1998 பெப்ரவரி, மார்ச் சரிநிகர் 141வது இதழ்) வாசிக்கப்பட்டது. சிறுவயதிலேயே பாலியல் இம்சைக்கு உள்ளான ஒரு சிறுமியின் உள்ளக் குமுறலாக அமைந்த இச் சிறுகதையின் சாராம்சம் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

தொடர்ந்து, "சிறுவர்கள் மீதான பாலியல் வல்லுறவு" என்ற தலைப்பில் திருமதி இன்பவல்லி தனது கட்டுரையில், சர்வதேச ரீதியில் சிறுவர் உரிமைகள் பேசப்படுவது பற்றியும், சிறுவர் உரிமைகளைப் பேண வேண்டிய பொறுப்புடையோர்களாலேயே உரிமை மீறப்படும் கொடுமை பற்றியும், சமூகம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் குறிப்பிட்டார்.

அடுத்து, சனதர்ம போதினி எனும் சஞ்சிகையில் சாருநிவேதிதா எழுதிய உன்னத சங்கீதம் எனும் சிறுகதை சர்ச் சைக்குள்ளானது. இச் சிறுகதையில் ஆசிரியர் சிறுவர் துஸ்பிரயோகம் செய்பவரின் (abuser) உளக் கிளர்ச்சி பற்றியே எழுதியுள்ளார். இவ்வாறான கதைகள் வெளிவருவது தவிர்க்கப்பட வேண்டும். இக் கதைகள் யாருக்கும் நன்மை பயப்பனவல்ல போன்ற கருத்துக்க்ளும், இக் கதையை இங்கு விவாதிப்பதென்பது இக்கதைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக அமையும் என்பதால் இதுபற்றிய உரையாடல் தவிர்க்கப் படவேண்டும் என சிலராலும், இவ்வாறான ஆக்கங்களை வெளியிடும் பத்திரிகைகள் சஞ்சிகை களுக்கு எமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவிப்பதால் எதிர் காலத்தில் இவ்வாறான குறைகளை தவிர்க்கலாம் என்பது போன்ற கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. பெண்கள் சந்திப்பில் கலந்து கொண்ட ஒரு சிலரை தவிர ஏனையோர் இக் கதை பற்றி அறிந்திருக்க வில்லை என்பதால் அனேகமானோருக்கு விளங் கவில்லை.

ஆயுதப் போரும் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் (மட்டக்களப்பு மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட சில வழக்குகளும், தரவுகளும்) எனும் தலைப்பிலான கருத்துக்கள் மா. மங்களேஸ்வரியால் முன்வைக்கப்பட்டது. இதில், இலங்கையில் கடந்த இரு தசாப்தமாக இடம் பெறும் யுத்தத்தினால் பெரும் பாதிப்புக்குள்ளானோர் பெண்களும் சிறுவர்களுமே என்பது சுட்டிக்காட்டப்பட்டது. யுத்த சூழலில் இழைக்கப்படும் பாலியல் வல்லுறவுகளும், உயிர் இழப்புக்களும், பெரிதும் பெண்களேயே பாதிக்கின்றது. 1998. 12. 31ந் திகதிவரை கணவனை இழந்து நட்ட ஈட்டினைப் பெற்றோர் 4292 என உத்தியோக பூர்வமான தகவல் காட்டுகிறது, இருந்தும் இழப்பீட்டுத் தொகையினைப் பெறுவதற்கு போதிய ஆவணங்களின்மை, (விவாகப் பதிவு) தேவையான நடவடிக்கை எடுக்கத்தவறுதல், அரசிடம் போதிய நிதிவசதியின்மை போன்ற காரணத்தால் பெற முடியாதுள்ள நிலமை பற்றியும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவோர் சட்டத்தின் பிடியினின்றும் தப்பித்துக் கொள்ளுதல் போன்ற குறைகளும் சுட்டிக்காட்டப்பட்டது.

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்கள் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பான "காற்றாய் புயலாய்..." பற்றியும் தனது அனுபவங்கள் பற்றியும், உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து (சுவிஸ்) ரஞ்ஜி அவர்களால் "பெண்ணிய நோக்கில் பால்வினைத் தொழில்" என்ற தலைப்பிலான கட்டுரை வாசிக்கப்பட்டது.

செல்வி என். நிருபாவினால் பெண்ணிய எழுத்துக்களா? பெண்ணியத்திற்கு சார்பான எழுதுதுக்களா? என்று முன்வைக்கப்பட்ட கட்டுரையில், 20 வருட புகலிட வாழ்வில், வெளிவரும் எழுத்துக்கள் பற்றியும் இலங்கைப் பெண்ணிலை வாதிகளின் ஆக்கங்கள் பற்றியதுமான கட்டுரையை முன்வைத்தார். இலங்கையில் குறிப்பாக செல்வி திருச்சந்திரன், பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு போன்றோரின் ஆக்கங்கள், "நிவேதினி" "பெண்" போன்ற சஞ்சிகைகள் பற்றியும் குறிப்பிட்டார். இவை தவிர பெண்ணியத்திற்கு சார்பானவர்கள் என்ற கருத்துப்பட சில ஆண்களால் முன்வைக்கப்படும் ஆக்கங்களில் பெண் விடுதலை என்பது பாலியல் விடுதலை என்றும் பெண்விடுதலை பற்றித் தாமே அறிவார்கள் என்ற மேதாவித்தமனமான எழுதுதுக்கள் பற்றியும் ஆதங்கப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதனிடையே 6வது மலராக "பெண்கள் சந்திப்பு மலர் 2001" வெளியிடப்பட்டது. 25 பெண்களின் ஆக்கங் களைக் கொண்டதாக இம் மலர் வடிவமைக்கப்பட் டுள்ளது.

பிரான்ஸ்சை சேர்ந்த ஜெபாவினால் நிகழ்த்தப் பட்ட" மனம்படுமொழி" எனும் பெண் வாழ்வியல் பற்றிய கவிதா நிகழ்வு, ஓரங்க நாடகத்தை பார்ப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. "மனம்படுமொழியினால் உள்வாங்கப்பட்ட சில சகோதரிகளின் உர்ணர்வுகள் அவ்விடத்திலேயே பிரதிபலித்தமையையும் காண முடிந் தது.

இராஜேஸ்வரி பாலசுப்ரமணியத்தின் "அவனும் சில வருடங்களும்" எனும் நாவல் விமர்சனத்தை, நிகழ் விற்கு தலைமை தாங்கிய திருமதி உமா வழங்கினார்.


"மிலேனியத்தில் பெண்கள் உரிமைப் போராட் டம்" பற்றிப் பேசிய தயாநிதி, உலகமயமாதல் பற்றியும் பெண்ணுரிமைப் போராட்டம் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் பற்றியும் குறிப்பிடடார்.

புகலிடத்தில் வாழும் பெண்கள் தங்கள் கருத்துக் களையும், அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ளும் களமாக "பெண்கள் சந்திப்பு" அமைய வேண்டும். எனும் நோக்கில் 1990இல் ஜேர்மனியிலுள்ள பெண்களால் ஆரம்பிக்கப்பட்ட 11வது வருடத்தில் காலடிவைக்கும் இந்த ஒன்று கூடலுக்கு சில மறைமுகமான எதிர்ப்புக் களும், நேரடியான வாக்கு வாதங்களும் இருந்தாலும் அதனை, தாண்டி, புரிதல்கள், பகிர்வு, இணக்கப்பாட் டுடன் முன்னெடுத்துச் சென்று அர்த்தமுள்ள பல பெண்கள் சந்திப்புக்களை ஏற்படுத்த வேண்டும்.

மா. மங்களேஸ்வரி

## காற்றோடு வந்த கதை

அவன் :- உனக்கு காச்சல் வந்தா என்ன செய்வாய்?
இவன் :- நான் மருந்து குடிப்பேன்
அவன் :. உனக்கு சிரிப்பு வந்தா என்ன செய்வாய்?
இவன் :- நான் தான் சிரிப்பன்
அவன் :- உனக்கு கோபம் வந்தா........?
இவன் :- என்ர மனுசியை அடிப்பன்.





ஓவியம் அருந்ததி

## தேடல்

என்னை இப்படித்தான் இரு
எனக் கூறும்போது
எனது இருப்புக்கொரு
அர்த்தம் தெரியவில்லை
ஆனால்..............
அந்த வாழ்க்கையை
நான் ஏற்றுக் கொண்டேன்.
எனக்காக ஒரு தேடல்
இருப்பதை உணரும் வரை
குறைகள் ஏதும்
எனக்குத் தெரியவில்லை.
உணர்ந்ததால் தான் ..........
எனக்குள் கேள்விகள், குழப்பங்கள்...........
எழுந்தன............
விடைகளுக்காய் நான் தினம்
காத்திருக்கலானேன்.
எனது காத்திருப்புக்களின்
பிரதிபலிப்பின் பின்னனியில்
வேதனைகள், சொல்லம்புகள்
சோகங்கள்? மிரட்டல்கள்
வேண்டாத பார்வைகள்
எல்லாமே எனை நோக்கியதாகத்
தொடர்ந்தன........ தொடர்கின்றன..............
ஆனால்..........
எனது பார்வையில்
தெரியும் அநியாயங்களுக்காக
நான் தினம் போராடுவேன்.

அருட்ஜோதி இராமையா

www.tamilarangam.net

# சங்கங்களின் காலாண்டுக் கூட்டம்.





சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையமானது சமூகத்தின் தேவை கருதியும், கிராமங்களையும், கிராமத்தின் முதுகெலும்பான பெண்களை மேம்படுத்தி சமூகத்தை ஆரோக்கியமாக கட்டியெழுப்பும் முகமாகவும் கிராமங்களிடையே பெண்கள் சங்கங்களை அமைத் துள்ளது.

இப் பெண்கள் சங்கங்களுக்கு வழிகாட்டியாக இருப்பதுடன் அவர்களை சிந்தனை, செயல் ஆகிய வற்றில் சுயமாக இயங்கச் செய்யும் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையிலும் எமது நிலையம் செயற்பட்டு வருகின்றது. இவ்வாறு இன்று ஆறு கிராமங்களில் பெண்கள் குழுக்களை அமைத்துள்ளது. (காங்கேயன் நோடை - ஆரையம்பதி சங்கமி சங்கம், நாவற்குடா உழைக்கும் மாதர் சங்கம், குமாரபுரம் உழைக்கும் மாதர் சங்கம், முறக்கொட்டான்சேனை பெண்கள் முன் னேற்ற சங்கம், பூ நொச்சிமுனை பெண்கள் சங்கம், இருதயபுர பெண்கள் சங்கம்)

இக் குழுக்கள் தமது செயற்பாடுகளின் மீளாய் விற்காக காலாண்டுக்கொருமுறை ஒன்று கூடுவார்கள். இதன் மூலம் தமது திட்டங்களில் தாம் அடைந்துள்ள முன்னேற்றங்களையும், தடைகளையும் பரிசீலனை செய் வார்கள். அத்துடன் தடைகளைச் சமாளிக்கும் மாற்று வழிமுறைகளை ஆராய்வதுடன் தமது புதிய தேவைப்பா டுகள் பற்றிய திட்டங்களை முன்வைத்து அவற்றைசெயற் படுத்தக் கூடிய எளிய வழிமுறைகளையும் கலந்துரை யாடி தீர்மானிப்பார்கள்.

இந்த வகையில் இவ்வருடத்திற்கான முதலாவது காலாண்டுக் கூட்டம் எமது நிலையத்தின் அனுசரணை யுடன் சங்கமி கங்கத்தின் ஏற்பாட்டில் ஆரையம்பதி தும்புப் பயிற்சி தொழிற்சாலையில் நடைபெற்றது.

முதல் நிகழ்வாக சங்கத்தின் கடந்த கால மதிப்பீடுகள் இடம் பெற்றன. தொடர்ந்து சங்கங்கள் தமது பெண்கள் குழுவின் வளர்ச்சி கருதியும், கிராமத் தின் தேவைப்பாடு கருதியும் பின் வருவனவற்றை செய்து முடிப்பதென தீர்மானித்தனர்.

1. குமாரபுரப் பெண்கள் சங்கம் - கிராமத்திற்கான மின்சார வசதியைப பெற்றுக் கொடுத்தல்.
2. இருதயபுர பெண்கள் சங்கம் - வீதியமைத்தல்.
3. முறக்கொட்டான்சேனை - சங்கம் இயங்குவதற்கு இடவசதியைப் பெறல், கிராமப் பெண்களுக்கு பனையோலைப் பயிற்சி வழங்கல்.
4. நாவற்குடா - சங்கத்தில் தளபாட வசதியை ஏற்படுத்தல்.
5. பூநொச்சிமுனை - கிராமத்தில் மலசலகூட, மின்சார வசதியைப் பெறல்.
6. சங்கமி சங்கம் - சங்கத்தில் சீரான நிர்வாக அமைப்பை உருவாக்குதல்.



முதலாவது காலாண்டுக் கூட்டத்தை தொடர்ந்து இரண்டாவது காலாண்டுக் கூட்டம் மே மாதம் 19ம் திகதி இருதயபுரம் வனத் அந்தோனியார் ஆலய பாலர் பாடசாலையில் இடம் பெற்றது. இக் கூட்டத்தில் முறக்கொட்டாஞ்சேனை, இருதயபுரம் ஆகிய பெண் கள் சங்கங்களின் துரித வளர்ச்சிக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இவர்களது முயற்சி களை ஊக்குவிக்கும் முகமாக எமது நிலையத்தால் பரிசுகள் வழங்கப்பட்டது.

மேலும் சங்கமி சங்க அங்கத்தவரிடையே காணப்படும் தொடர்பாடல் குறைபாடும், நாவற்குடா அங்கத்தவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கி இருக்கும் நிலையும் மாற வேண்டும் எனவும் கூறப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "முறக்கொட்டாஞ்சேனை நூலகமும் சுயதொழில் பயிற்சி வகுப்பும்"





எமது நிலையமானது பெண்களின் விழிப்புணர்வு கருதி கிராமங்களிடையே பெண்கள் அணிதிரட்டல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.. இந்த வகையில் கிராமங்களிடையே பல பெண்கள் குழுக்களை அமைத்து செயற்பட்டு வருவது யாவரும் அறிந்ததே இக் குழுக்கள் தத்தம் கிராமங்களில் பலவாறான அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

இக்குழுக்கள் பெண்களுக்கான எழுத்தறிவுத் திட்டம், விழிப்புணர்வுப் பயிற்சி வகுப்புகள், நூலகம் அமைத்தல், சிறுவர் குழுக்களை உருவாக்குதல், போன்ற கிராம அபிவிருத்தி நோக்கிய செயற்பாடுகளை செய்து கொண்டு வருகின்றன.

இந்த வகையில் முறக்கொட்டாஞ்சேனைப் பெண்கள் சங்கமானது அக் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் கழகத்துடன் இணைந்து ஓர் சிறு நூலகத்தை சங்க உறுப்பினர் ஒருவரின் வீட்டில் ஆரம்பித்துள்ளது. இக் கிராமத்தில் நூலகம் இல்லாதது பெரும் குறையாகவே இருந்து வருகின்றது. இம்முக்கிய தேவையை குறைந்த அளவிலேனும் நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்குடன் சங்க உறுப்பினர்கள் செயற்படுவது பாராட்டத்தக்கது.

இந் நூலகத்தைப் பாடசாலைப் பிள்ளைகளும் அவ் ஊர் வாசகர்களும் பெரிதும் பயன்படுத்துகிறார்கள் இங்கு கதை, கவிதை, கட்டுரை, நாடக புத்தகங்கள் உட்பட எமது நிலைய வெளியீடுகள், நல்வழிகாட்டும் நூல்கள், பாடசாலை மாணவர்களுக்கான வினா விடைப் புத்தகங்கள், தியானப் புத்தகங்கள், சுயசரிதைகள், மருத்துவ, அரசியல் தகவல்கள் அடங்கிய நூல்கள், சமயவரலாற்று நூல்கள், விஞ்ஞான, பொருளியல் நூல்கள், ஆசிரிய போட்டிப் பரீட்சைக்கான நூல்கள் என்பன காணக்கிடக்கின்றன. அதிக அளவில் நூல்கள் இங்கு காணப்படாவிட்டாலும் எதிர் வரும் காலங்களில் பெரியளவிலான ஓர் நூலகத்தை அமைக்க வேண்டும் என்பதே அங்கத்தவர் அனைவரதும் விருப்பமாகும். அத்துடன் இவ ஊர்க் கடைச் சொந்தக்காரர்கள் தினசரிப் பத்திரிகைகளை பெற்று நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்குவது சிறப்பாக குறிப்பிடத்தக்கது

அத்துடன் படித்துவிட்டு வீட்டில் இருக்கும் பெண்களுக்கு சுய தொழில் வழங்குவதற்காக இங்கு இலகுவாகப் பெறக்கூடிய மூலப் பொருளான பனை யோலையைப் பயன்படுத்தும் பனையோலைப் பயிற்சி வகுப்பொன்றையும் இச் சங்கம் ஆரம்பித்துள்ளது. இப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் இச் சங்கம் செய்துள்ளது.



www.tamilarangam.net

# உதவி செய்யா விட்டாலும் . . . .

## பெண்கள் நாட்டில் தலை நிமிர்ந்து பயமின்றி சந்தோசமாய் உலவி வாழ வேண்டும்!

தொடரலையாய் தொடரும் படுகொலைக் குவியலில் முக்கால் வாசி என்புக்கூடுகள் வன்முறைக்குட்பட்டு குறிப்பாக பாலியல் வன்முறைக்குட்பட்டு கொலை செய்யப்பட்ட பெண்களுடையதாகவே காணப்படுகிறது. தனியே செல்லப் பயம், தனித்துச் செயல்பட பயம், மனிதரை மனிதர் சந்தித்துக் கொள்ளப் பயம். ஆண் எனும் மனித இனம் அபரிணாம வளர்ச்சியாய் காட்டுமிராண்டித் தனங்களின் கொடூர புத்தி கொண்ட புதிய ஓர் விலங்கினமாய் மக்களுக்குள்ளே மாறி வருவது கவலைக்குரிய கண்கூடு.

இது ஓர் புறமிருக்க, இன்றைய போர்ச் சூழல் ஆயுதபாணிகள் பலரை தோற்றுவித்துள்ளது. "பொது மக்களின் பாதுகாப்பிற்கு" எனும் போர்வையை மக்களின் தேவை எனச் சொல்லி அரசு ஏராளமான அபரினாம விலங்குகளை மக்களுக்குள்ளேயே அனுப்பி விட்டது. இவர்கள் இன்று நடத்தி வரும் பாலியல் ரீதியான பலாத்காரங்களும் கொடூரமான கொலைகளும், கிரிசாந்தி . . . சாரதாம்பாள் . . . விஜிகலா . . . சிவமணி . . . **பயிர்களை மேயும் வேலிகளாய் அரச பாதுகாப்புப் படையினர் இன்பம், துன்பம் , எதிர்காலம், குடும்பம், சிந்தனை, உணர்வு, உயிர் கொண்ட பெண்கள் அகோர முறையில் வன்முறைக்குட்படுத்துவது கண்டிக்கத்தக்கது.**

**தினக்கதிர் 05.04.2001**
நீர் கொழும்பு பொலிஸ் நிலையத்தில் யாழ் யுவதி விசாரணை என்ற பெயரில் கொடூரமான முறையில் பாலியல் சித்திரவதை.

**தினக்குரல் 09.02.2001**
செட்டிபாளைய விஷேட அதிரடிப்படை வீரர் இரு பிள்ளைகளின் தாயை பாலியல் வல்லுறவிற்குட்படுத்தினார்.

**தினக்குரல்05.02.2001**
இராணுவப் படையிலிருந்து தப்பிபோடியவர் 12 வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவிற்குட்படுத்தினார்.




இது ஒரு புறமிருக்க, இவ்வாறான செயல்கள் நடைபெறும்போது தாங்கள் இவ்விடயத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் போல் காட்டிக் கொள்வதற்கு தொடர்பு சாதன ஊடகங்கள் முனைவது வருந்தத்தக்கது. இதற்காக இவர்கள் கையாளும் உத்திகளில் ஒன்று பெண்கள் அமைப்புக்கள் இவ்வாறான சமயங்களில் என்ன செய்கிறது? எனும் கேள்வியாகும். பெண்கள் அமைப்புக்கள் இதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. உதாரணமாக எமது கிழக்குப் பிராந்திய பெண்கள் நிறுவனங்களின் கூட்டமைப்பினால் சாரதாம்பாள் பாலியல் வல்லுறவு, கொலை தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதமும் அதற்கான அரசின் பதிலும் (பெண் இதழ் 5:1) மன்னாரில் கைதான விஜிகலா, சிவமணி பாலியல் வல்லுறவிற்காக ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட 10,000 தபாலட்டைகள். பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிராக அழுத்தம் கொடுக்கும் அறிக்கை (13-07-2001 வீரகேசரி, 10-07-2001 தினகரன்) தொடர்ந்து இடம் பெறும் வன்முறைகளுக்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள். ஆனால் இது தொடர்பான தகவல்களையும் நடவடிக்கைகளையும் உடனுக்குடன் ஊடகங்களுக்கு அறிவித்து விளம்பரப்படுத்துவதில்லை. ஏனெனில் உரிய நபரின் பாதுகாப்பு, அவரின் எதிர்காலம், அவர்களின் குடும்ப உறவினர்களின் பாதுகாப்பு போன்றவற்றை பெண்கள் அமைப்புக்கள் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

**சுட்டும் விரலால் மற்றவர்களை குற்றம் கூறுகையில் ஏனைய நான்கு விரல்கள் தங்களைக் காட்டுவதை சமூகப் பொறுப்பான கடமையில் ஈடுபடும் அனைவரும் உணர வேண்டும்.**







www.tamilarangam.net

இது ஒரு புறமிருக்க, போர்ச்சூழலில் அகப்பட்டு மாண்டு மடியும் உயிர்கள், தேடுதல் வேட்டை, விசாரணை, கைது என பலியாகும் பெண்கள், ஊடகங்களின் நச்சரிப்புக்கள் . . . , இவற்றிற்குள் தம்மைப் பாதுகாத்து வாழும் பெண்களை தாக்கும், சிறுவர்களை அதிலும் சிறுமிகளை பாலியல் துஷ்பிர யோகம் செய்யும் நன்பனான, உறவினனான, தெரிந்த வனான சக இனத்தவனான ஆண்கள்.

எரியும் நெருப்பில்எண்ணெய் ஊற்றுவது உண்மை உறவுகள் அல்ல




**வீரகேசரி 12.01.2001**
பூண்டுலோயாவைச் சேர்ந்த இரு குழந்தைகளின் தாயை ஆட்டோ சாரதியும் அவரது நன்பரும் பாலியல் வல்லுறவு புரிந்தனர்.

**தினக்குரல் 25.02.2001**
இரத்தோட்டையைச் சேர்ந்த 17 வயது மாணவி 4 இளைஞர்களினால் பாலியல் வல்லுறவிட்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

**தினக்குரல் 08.04.2001**
எருவில் பாடசாலை மாணவி, ஆசிரியரினால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.
மட். புன்னச்சோலையை சேர்ந்த 7 வயதுச் சிறுமி தந்தையினால் பாலியல் வல்லுறவிற்குள்ளானார்.

**தினக்குரல் 31.05**
மினுவாங்கொட மாபொடல்ல பகுதி இளம் விதவை 3 ஆண்களால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப் பட்டார்.

நாமும் நாடும் எங்கே செல்கின்றோம்?.............
நாடு என்பது அனைவருக்கும் பொதுவானது. அதில் வாழும் மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் நன்பர் களே. ஆகவேஇனிமேலாவது “நீ என்ன செய்தாய்” என்ற கேள்வியை தவிர்த்து அனைவரும் இணைந்து ஒன்றாக யாது செய்யப் போகிறோம் என்ற கேள்வி அனைத்து பொது, ஊடக, நிறுவன, தனி நபர்களிடையே எழ வேண்டும். நட்புறவான தொடர்பாடல் இடம்பெற வேண்டும். குறை கூறியே பெயர் வாங்கும் சிந்தனையை விலக்க வேண்டும்.

**விஜயலட்சுமி சேகர்**

## சில புத்திமதி

பெண்ணே!
புத்தியுடன்
சேர்த்து நகங்களையும்
கூர்மையாக்கிக் கொள்
உனை பாதுகாக்க
உதவும்.

காய்கறிகளை
நறுக்கு
மீனை வெட்டு
வேண்டாம் என்று
சொல்லவில்லை.
அத்துடன்
உன் அழகைத்
தளையையும்
கத்தரிக்க முயற்சி செய்.

உரலில் தினமும்
உலக்கையால்
குற்றிக் கொண்டிருப்பதுடன்
நில்லாமல்
கேள்விக்
கணைகளால்
உள்ளத்தையும்
குற்றிக் கேட்டுப்பார்
நான் யார்? என்று.

உன் சுதந்திரத்திற்காய்
போராடு
படிப்படியாய்
வெளி உலகை எட்டிப் பார்
சுதந்திரக் காற்றை சுவாசிப்பாய

த.சகுந்தலா
கிழக்குப் பல்கலைக் கழகம்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
இல. 20, டயஸ் வீதி,
மட்டக்களப்பு.
தொ. பேசி - 23297

முகவரி :- ..........................................
..........................................
..........................................
..........................................


ISSN. 1391-6130

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்